**செய்தி வெளியீடு எண்: 540** **நாள்:27.08.2019**

**செய்தி வெளியீடு**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் 26.8.2019 அன்று தலைமைச் செயலகத்தில், சென்னை அரசு ஸ்டான்லி மருத்துவக் கல்லூரியில் M.B.B.S. முதலாம் ஆண்டு பட்டப்படிப்பு பயின்று வரும் சேலம் மாவட்ட, மிகப் பிற்படுத்தப்பட்ட வகுப்பை சேர்ந்த வன்னியர் இன மாணவர் திரு. எம். குபேந்திர நாட்டமை அவர்களுக்கு பி.டி.லீ. செங்கல்வராய நாயக்கர் அறக்கட்டளையின் சார்பில் நான்கரை ஆண்டுகால மருத்துவப் படிப்பின் விடுதிக் கட்டணமான 2 லட்சத்து 43 ஆயிரம் ரூபாய் வழங்குவதற்கான ஒப்புதல் கடிதத்தையும், நடப்பாண்டிற்கான விடுதிக் கட்டணமான 54 ஆயிரம் ரூபாய்க்கான காசோலையையும் வழங்கினார்கள்.

இந்த நிகழ்ச்சியில், மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை அமைச்சர் திருமதி எஸ். வளர்மதி, தலைமைச் செயலாளர் திரு. க. சண்முகம், இ.ஆ.ப., பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை செயலாளர் திரு. ஆ. கார்த்திக், இ.ஆ.ப., பி.டி.லீ. செங்கல்வராய நாயக்கர் அறக்கட்டளையின் தலைவர் நீதியரசர் திரு.எஸ். இராஜேஸ்வரன், தமிழ்நாடு வன்னியகுல சத்திரியர் அறநிலைப் பொறுப்பாட்சிகள் மற்றும் நிலக்கொடைகள் நிர்வாகக் குழுமத் தலைவர் திரு.ஜி. சந்தானம், இ.ஆ.ப., (ஓய்வு), அறக்கட்டளையின் அறங்காவலர்கள் திரு. சி. பரந்தாமன், திரு. சுகேந்திரன், திரு. தமிழ்மணி, டாக்டர் ஜி. விசுவநாதன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

* * * * *

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**